RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1329

OPEN ACCESS

# புறநானூற்றில் முருகியல் கோட்பாடு

## க. வெண்ணிலா [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, சேலம்-636008, தமிழ்நாடு, இந்தியா

# The Doctrine of Aesthetics in Purananuru

## K. Vennila [a, *]

[a] Department of Tamil, Government Arts College for Women, Salem-636008 Tamil Nadu, India

* Corresponding Author: vennila.kk1993@gmail.com

Received: 28-05-2022
Revised: 19-08-2022
Accepted: 05-09-2022
Published: 21-11-2022

Check for updates

**ABSTRACT**

Sangam literature occupies a unique place in classical literature and is a mirror that accurately reflects the lives of the people. Both the books, Ettuthozhi and Pathupaattu, are called "Sangam literature." This is also known as the "Pathinenmerkanakku." "Kanakku" means song. "Merkanakku" means a song having a lot of lines. The total number of lines in Sangam literature is 26,350. Agam (1862) and Puram (519) are two of the 2381 songs known from literary histories. The songs on love and war were compiled and named "Sangam literature," which remained extinct in the ocean planet, termite, and time flood. Of the eight volumes of Sangam literature, the book Purananooru contains four hundred (400) verses on external subject matters such as the greeting of God. This book shows the virtues of aesthetics through traditions, governance, way of life, historical elements, mythological stories, warfare, the superiority of friendship, the king's bravery, and the skill of women.

**Keywords:** Sangam literature, friendship, Purananooru, Agam, Puram.

## முன்னுரை

சங்க இலக்கியத்தில் சிறந்த புறநூலாகத் திகழக்கூடிய வரலாற்று பெட்டகமாக விளங்கும் புறநானூற்றின் வழி சங்கத் தமிழர்களின் அற உணர்வுகளை முருகியலுடன் எடுத்தாளுவதே இவ்வியல் நோக்கம் ஆகும். முருகியல் என்பதின் ஆழ்ந்த அர்த்தம், அதன் பொருள் பற்றிக் கூறுகிறது. புறநானூற்றில் அறமுருகியல் எனும் தலைப்பில் பழந்தமிழர்களின் வாழ்வியல் பண்பாட்டு, பழக்கவழக்கங்களின் முருகியல் வெளிப்பாட்டின் கூறுகள் தரப்பட்டுள்ளன. இவைப் போலவே, புறநானூற்றில் மனித நேயம், நட்பின் அழகு, ஈகை அறம், விருந்தோம்பலின் அழகு, கடமை அறம், கல்வியின் மேன்மை போன்ற தலைப்பில் முருகியல் வெளிப்பாடு எடுத்தாளப்பட்டுள்ளது.

முருகியல் என்பதை தமிழில் அழகியல் என்று கூறுவர், முருகு என்பதற்கு தமிழில் பல பொருள்கள் காணப்படுகின்றன. மதுரைத் தமிழ்ப் பேரகராதி முருகு என்பதற்கு, "அழகு, இளமை, அகில், வாசனை, பூத்தட்டு. வெளியாட்டாளன், திருமுருகாற்றுப்படை" என்று பல பொருட்களைக் குறிப்பிட்டுள்ளது. முருகியலுக்கு அகராதி தரும் விளக்கத்தினைக் காணும்போது முருகியலின் தனிச்சிறப்பினை உணர முடிகிறது (Sandhiya Nadarajan, 2004).

முருகியல் அல்லது அழகியல் என்பது அழகு வாய்ந்த ஒரு பொருளைக் காணும்போது உள்ளத்தில் ஏற்படும் அதீத உணர்ச்சியே அல்லது கவிஞர்களின் கற்பனை உத்தியே முருகியல் என்பர். படைப்புக்கலைஞர்களின் கவிதைத் திறத்திலும், கற்பனை வளத்திலும், கருத்தாழத்திலும் முருகியல் சிறப்பினைக் காணலாம்.

புறநானூற்றில் மன்னர், மக்கள் அனைவரும் அறப்பண்புகளைக் கடைப்பிடித்து மக்களுக்கு ஒழுக்க நெறியை புகுத்தி நல்வாழ்வு வாழ்ந்து வந்தனர். அரசர்கள் தங்கள் கடமையைச் சீரும் சிறப்புமாக செய்து நாட்டை வளமடையச் செய்தனர். உயிர்களிடத்தில் அன்பு அக்கறை காட்டி இரக்க உணர்வுடன் வாழ்ந்த செய்தியை புறநானூறு அழகாக எடுத்துக் கூறுகிறது. பாரி - கபிலர், பிசிராந்தையார், கோப்பெருஞ்சோழன் நட்பு, ஔவை மற்றும் அதியமானின் நட்பு "நவில்தோறும் நூல்நயபோல" இவர்களின் நட்பு உயிரோட்டமாக படிப்போரை ஈர்க்கும் எனலாம். குமணனின் ஈகைப் பண்பு மக்களை நல்வழிப்படுத்த எடுத்தாளப்பட்டுள்ளன. பழந்தமிழர் வறுமையிலும் பிறருக்கு உதவும் அறக்கோட்பாடு உடையவர்களாகத் திகழ்ந்து உள்ளனர். ஒவ்வொரு மனிதனும் தனக்கு உண்டான கடமையைத் தீதில்லாமல் செய்தாலே சமூகமும் சிறக்கும். தாமும் வளர்வோம் என்று அழகாகக் கூறப்பட்டுள்ளன. வாய்மையே அனைத்து அறங்களுக்கு முதன்மையான அறமாகும். இத்துணைப் பண்புகளையும் ஒருங்கே பெற்ற நூலான புறுநானூற்றின் முருகியல் அழகு இங்கு எடுத்துரைக்கப்படுகின்றன.

## புறநானூற்றில் - அற முருகியல்

புறநானூற்றில் அறத்தன்மை முருகியல் அழகுடன் எடுத்தாளப்பட்டுள்ளன. அறம் என்ற சொல்லுக்கு நீதி, கடமை, ஒழுக்கம், பழக்கவழக்கம், புண்ணியம், ஈகை என்றெல்லாம் பல பொருள்கள் உண்டு. அறம் என்பதற்கு ஒழுக்கம் என்ற பொருளையே எழுதுகிறார்.

எந்த உயிர்க்கும் தீங்கு விளைவிக்காமல், தூய வாழ்வு வாழ்வதே சிறந்த அறமாகும் என்ற இக்கருத்தை வலியுறுத்தும் விதத்தில்,

"நல்லன செய்தல் ஆற்றீராயினும்

அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்

எல்லோரும் உறுப்பது அன்றியும்

நல்லாற்றுப்படூஉம் நெறியுமார் அதுவே"

என்ற புறப்பாடலே அறம் என்னும் சொல்லுக்குப் பொருள் விளக்கம் தந்து அழகு கூட்டுகின்றது. இதில் தனிமனித அறம், பண்பாட்டு அறம், மன்னர்களின் அறம் போன்றவை அமைந்து இந்நூலுக்கு அழகு கூட்டுகின்றது (Balasubramanian, 2004).

"புறநானூறு பழந்தமிழ் மக்களின் வாழ்வியல் அரசியல், சமூகவியல், வரலாறுகளையும், பண்பாட்டு பழக்கவழக்கங்களையும் அறிதற்குரிய அருங்கருவூலமாய் அமைந்து விளங்குகிறது" (Gurunathan, 2003).

இந்நூல் வரலாற்றுப் பெட்டகமாகத் திகழ்கின்றது என்று இராம. குருநாதன் குறிப்பிடுகிறார். வரலாறு, பண்பாடு, பழக்கவழக்கங்களின் மூலமாக வருங்கால சமுதாயத்திற்கு அறத்தின் முக்கியத்துவத்தை முருகியல் வடிவில் புறநானூறு எடுத்துரைத்துள்ளது. "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற பொதுவுடைமைச் சிந்தனையும், அறநெறி முற்றத்தே என்ற பாடலில்அரசின் கடமையும், "எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே", ஒரு நாட்டில் ஆடவர் நல்லவராக இருந்தால் அந்த நாடே சிறப்படையும் என்றும் இன்னும் பற்பல அறக்கருத்துக்களை முருகியல் நோக்கில் கூறப்பட்டுள்ளன.

இத்துணை கருத்தாழம் மிக்க புறநானூறு சிறப்பானது என்பதை,

"புறநானூற்றின் பொருள்மையை அத்துணை எளிதாக உணர்ந்து கொள்ள முடியாது"

என்று குறிப்பிடுகிறார் (Thirunavukkarasu, 2007). இக்கருத்தினையே மையமாகக் கொண்டு,

"புறநானூற்றுக்கு இணையாக வேறொரு நூல் இல்லை"

எனும் கவிஞரும் புறநானூற்றின் தனித்தன்மையை அழகாக எடுத்துரைத்துள்ளார் (Gurunathan, 2003).

புறநானூற்றுக் கருத்துக்கள் யாவும் தமிழர்களின் வீரவாழ்வையும், செந்நெறி வாழ்வையும் எடுத்துக்காட்டுவதாகும். பண்டைத் தமிழரின் போரியல் செய்திகள் நாகரிகம் பண்பாட்டு நிலைகள் முதலானவற்றை விளக்கமாக உரைப்பதால் பண்டைத் தமிழகத்தின் வரலாற்றுக் களஞ்சியமாகப் புறப்பாடல் உள்ளது என்பதை அறியமுடிகிறது.

## புறநானூற்றில் மனிதநேயம் - முருகியல்

புறநானூற்றில் தமிழர்களின் வீரத்தன்மைப் பற்றிக் கூறினாலும் அவ்வீரத்தில் சில அறக்கருத்துக்களும். மனிதநேயக் கருத்துக்களும் காணப்படுகின்றது. மன்னர்களும், புலவர்களும் பல அறக்கருத்துக்களைக் கூறியுள்ளனர். அக்கருத்துக்கள் அனைத்தும் அன்றைய சூழ்நிலையிலும், வருங்கால சூழ்நிலை மாற்றத்திற்கும் உறுதுணையாக இருந்து மக்களை நல்வழிப்படுத்துவதாக எழுத்தோவியமாக அழகியலில் மிளிர்கின்றது எனலாம்.

போர்புரியும் காலக்கட்டத்திலும் அதாவது எதிரி நாட்டை கைப்பற்ற நடக்கும் போர் ஆனாலும் அதிலும் அறத்தை கைவிடாது கடைப்பிடிக்க வேண்டும் என்பதை,

“ஆவும் ஆனியந்த பார்ப்பன மாக்களும்

பெண்டிரும் பிணியுடைய யீரும் பேணித்

தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இருக்கு

பெண்பேற் பால்வர்ப் பெறாதீரும்”

என்ற பாடலில் நெட்டிமையார் எனும் புலவர், மன்னனின் அறஉணர்வை உணர்த்த தன்னுடன் போர்புரியும் எதிரி நாட்டு மக்களிடமும் அறத்தை வலியுறுத்தியுள்ளான். அதாவது பார்ப்பன மக்கள், பெண்டிர். நோய்வாய்பட்டவர்கள், தன்னுடைய இறப்பிற்குப் பிறகு ஈமச்சடங்கு செய்ய பிள்ளைகளைப் பெறாதவர்கள், ஆநிரைகளை் அனைவரும் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும்படி பறை அறிவிக்கின்றனர். அதன் மூலம் திண்மை உடையவர்களிடம் மட்டுமே போர் புரிய வேண்டும். அதாவது தனக்கு நிகரான வீரத்தன்மை புரிந்தவர்களிடம் போர் புரிவதே ஒரு சிறந்த வீரனுக்கு அழகு. கோழைகளிடம் போர் புரிவது இழிவான செயல் என்று போரிலும் அறக்கருத்தை அழகியலுடன் எடுத்துரைத்துள்ளார் (Balasubramanian, 2004).

மக்களின் உயிராக மன்னன் திகழ வேண்டும் என்ற மனிதநேய நோக்குடன்,

“நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே

மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்”

என்ற பாடலின் மூலம், உலகில் வாழும் மக்களுக்கு நெல்லும் நீரும் மட்டும் உணவில்லை, அந்த நாட்டினைக் காக்கக்கூடிய மன்னனே மக்களை உயிராகக் கருத வேண்டும். மன்னனையே மக்கள் கடவுளாகப் பாவிக்கின்றனர் என்ற கருத்தும் அழகினைத் தருவதாக உள்ளது (Balasubramanian, 2004).

## புறநானூற்றில் நட்பின் அழகு

புறநானூற்றில் நட்பின் பெருமையை அழகாக வெளிப்படுத்தியுள்ளனர். புலவர் பெருமக்கள் திருக்குறள் நட்பின் பெருமையைச் சிறப்பிப்பதைப்போல புறநானூறும் நட்பின் பெருமையை கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார் நட்பு, ஔவையார் - அதியமான் நட்பு, பாரி கபிலர் நட்பு என நட்பிற்குச் சிறந்த சான்றோர்களை அழகுடன் எடுத்துரைக்கின்றது.

திருவள்ளுவர் நட்பின் சிறப்பை,

“நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்

பண்புடை யாளர் தொடர்பு”

என்ற குறளைப் போல ஔவையாருக்கும், அதியமானுக்கும் இடையில் நட்பானது வளர்ந்து கொண்டே சென்றது (Meiyappan, 1992). அதியமான் பரிசு தரக் காலம் தாழ்த்தினாலும் தாழ்த்தாவிட்டாலும்,

“கோட்டிடை வைத்த கவளம் போலக்

கையகத் ததுவது பொய்யா காதே”

என்று அதியமானைப் புகழ்ந்து பாடியுள்ளார் (Balasubramanian, 2004). யானைக்கு அளிக்கப்படும் உணவு மிக அதிகஅளவில் இருக்கும். அதாவது அதியமான் தன்னை நாடிவரும் இரவலரைக் காக்க வைத்தாலும் இறுதியில் அவர்களின் மனம் மகிழும்படி பரிசுகளை வழங்கும் குணம் உடையவன் என்று கூறி இருவரின் நட்பு ஆழத்தையும் அழகாக பாடியுள்ளார். இதில் தன்னிடம் இரவல் என்று கேட்போருக்கு இல்லையெனக் கூறாது வழங்கும் மகத்தான உயரிய பண்பு அறமாக வெளிப்படுவதையும் உணர முடிகிறது.

மேலும்,

“சிறியிலை நெல்லித் திங்கனி குறியாது

ஆதனின்னகத் தடக்கிக்

சாத நீங்க வெமக்கீத் தனையே”

என்ற பாடலில் உயிரைக் காக்கும் நெல்லிக்கனியே கிடைத்தாலும் அதனை ஔவைக்கு வழங்கி மகிழும் அதியனின் தனிமனித அறத்தை உணர்வுப்பூர்வமாக உணர முடிகிறது. இதில் அமிர்தமே கிடைத்தாலும் தனக்கென வைத்துக் கொள்ளலாமல் பிறருக்குக் கொடுத்து அவர்களின் மனம் மகிழ்வைப் பார்த்து மகிழும் உயரிய பண்பின் அறத்தை ஔவை வெளிப்படுத்தியுள்ள அழகினை அறிய முடிகிறது (Balasubramanian, 2004).

“ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்

அறிவி லோங்கிவ் வையந் தழைக்குமாம்”

என்று பாரதியார் கூறியதைப்போல ஆணும் பெண்ணும் சங்க காலத்தில் நட்புடன் வாழ்ந்தனர் என்பதையும், ஆண் - பெண் நட்பிற்கு வழிவகுத்த முதல் பெண்மணி. ஔவையார் தான் என்று அறிய முடிகிறது. ஆண் - பெண் வேறுபாடு கருதாது வாழ்ந்தால் மட்டுமே ஒரு வளமான சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பதை அக்கால கட்டத்திலே அழகாக எடுத்துரைத்தப் பாங்கினையும், ஒரு சிறந்த சமுதாயம் அமைய ஆண் பெண் என இருவரின் பங்களிப்பும் அவசியம் என சமூக அறத்தை முருகியலுடன் வெளிப்படுத்தியுள்ளார் (Meiyappan, 1992).

கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையாரின் நட்பை,

“இசைமரபு ஆக, நட்புக் கந்தாக

இணையதோர் காலை ஈங்க வருதல்

வருவன் என்ற கோணது பெருமையும்

அது பழுது இன்றி வந்ததின் அறிவும்

வியத்தொலும் வியப்பிறந் தன்றே”

என்ற பாடலில் கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார் இருவருமே ஒருவருக்கொருவர் பார்த்திடாமல் இருவரும் நட்பு கொண்டு வாழ்ந்து வந்தனர். கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து

உயிர்விட்டதை அறிந்து பிசிராந்தையாரும் வடக்கிருந்து உயிர் துறந்தார். இவ்விருவரின் நட்பை எண்ணும்போது மெய்சிலிர்க்கின்றது (Balasubramanian, 2004).

## ஈகையில் முருகியல் அறம்

பண்டைத் தமிழர் பயன் நோக்காது, பிறர் வறுமையைப் போக்குதலைக் கடையாகக் கொண்டு அறம் செய்தனர். ஒருவர் துன்ப நிலையில் இருக்கும்போது அதனை அறிந்து அவர்களுக்கு வேண்டுவன வழங்குதல் ஈகையாகும். அதனை,

"ஈயென இரத்தல் இழிந்தன்று, அதன் எதிர்

ஈயென் என்றல் அதனினும் இழிந்தன்று

கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதன் எதிர்

கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று"

என்று புறநானூறு கூறுகிறது. ஒருவரிடம் ஒன்றை தா எனக் கேட்பது இழிவான செயல் அவ்வாறு கேட்டு அவர்கள் தரவில்லையெனில் அதனைவிட இழிவு வேறு எதுவும் இல்லை (Balasubramanian, 2004). நம்மினும் வறுமையில் வாடும் மக்களைக் காணுகையில் தங்களால் முடிந்த உதவியை ஒவ்வொருவரும் செய்ய வேண்டும் என்ற பண்பை அழகாக வெளிப்படுத்தி மக்களின் மனதில் ஈகை அறத்தை ஊன்றியுள்ளார் புலவர். பாரி, காரி, ஓரி, நல்லி ஆய் அண்டிரன், அதியமான், பேகன் போன்ற கடையெழு வள்ளல்களும், குமணன், சீதகாதி போன்ற வள்ளல்களும் வாழ்ந்த விதம் தமிழர்களின் ஈகை உள்ளத்தை வெளிப்படுத்தின.

"நாடு இழந்த தனினும் நனி இன்னாது என

வாள் தந்தனனே, தலை எனக்கு ஈயத்

தன்னில் சிறந்தது பிறிது ஒன்றுஇன்மையின்"

தன்னிடம் வந்து யாசித்தவர்களுக்கு இல்லையென கூறாது தன்னுடைய உயிரையே துச்சமாக நினைத்து பிறருக்கு உதவ நினைக்கும் குமணனின் ஈகைப் பண்பின் அறத்தை உணர முடிகிறது (Balasubramanian, 2004).

"பாரி ஒருவனும் அல்லன்

மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே"

என்ற பாடலில் மழைக்கு நிகராக பாரி என்னும் மன்னனின் ஈகை திறத்தை அழகோவியமாக வெளிப்படுத்தியுள்ள பாங்கினை அறிய முடிகிறது. மழையானது கைமாறு கருதாது வழங்குவதைப் போல பாரியும் பிறருக்கு வழங்கக் கூடியவன் என்று புகழ்ந்துரைக்கின்றார். இதன் மூலம் ஈகை அறம் அனைவரிடத்திலும் இருக்க வேண்டும் என்பதைப் புலப்படுத்தியுள்ளார் (Balasubramanian, 2004).

## விருந்தோம்பலின் அழகு

இல்லறத்தின் மாண்பு விருந்தோம்பலாகும். தம்மை நாடிவரும் விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்று அவர்களுக்கு உணவளித்த பசியெனும் பிணியை போக்குவதே சிறந்த விருந்தோம்பல் ஆகும். இதனைத் தொல்காப்பியம்,

"விருந்து புறந்தருதல்"

என்று மனைவியின் பண்பாக விருந்தோம்பலை கூறியுள்ளது. இவ்விருந்தோம்பலைப் பற்றி புறநானூற்றில் பல பாடல்கள் காணப்படுகின்றது (Elavazhagan, 2003). வீட்டிற்குவரும் விருந்தினரை வரவேற்று சுவையான உணவளித்து விருந்தோம்புவதே பழியற்ற வாழ்க்கை என்பதை,

“வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை”

என்ற அடியால் ஊன்பொதி பசுங்குடையார் அழகாக பாடியுள்ளார் (Balasubramanian, 2004).

“ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்

பலநாள் பயின்று பலரொடு செல்கினும்

தலைநாள் போன்ற விருப்பினர் மாதே”

என ஔவையார் பாடிய இவ்வரிகள் அதியமானின் விருந்தினர்களை உபசரிக்கும் மாண்பினை விளக்குகிறது. ஒருநாள் சென்றாலும் அல்லது ஒவ்வொருநாளும் சென்றாலும் முதல்நாள் விருந்தினரை வரவழைத்து உணவு அளித்ததைப் போலவே இன்முகத்துடன் விருந்தோம்பல் வழங்குவான் என்று பாடியுள்ளார். விருந்தோம்பலின் மூலம் பண்டையத் தமிழரின் பண்பாட்டு அறத்தை உலகறிய புலவர் பெருமக்கள் செய்துள்ளனர் (Balasubramanian, 2004).

“விருந்து கண்டு ஒளிக்கும் திருத்தா வாழ்க்கை”

என்ற அடியால் பெருங்குன்றூர்கிழார் சோழ மன்னன் உருவப்பல்றோ இளஞ்சேட் சென்னியிடம் அடைக்கலமாக அடைந்ததைக் கூறுவதன் மூலம் விருந்தோம்பலின் தனிச்சிறப்பினை உணர முடிகிறது. விருந்தோம்பல் பண்பு நம் தமிழர்களின் பாரம்பரியத்தை பறைச்சாற்றும் விதமாக அமைவதுடன் வருங்கால சந்ததியினரும் விருந்தோம்பல் பண்பினை வளர்க்க வேண்டும் என எடுத்துரைப்பதை உணர முடிகிறது (Balasubramanian, 2004).

“அமிழ்தம் இயைவது ஆயினும் இனிது எனத்

தமியர் உண்டலும் இலரே”

புறநானூற்றுப் புலவர்கள் தாம் பெற்ற பரிசிலைத் தங்கள் நலனுக்காக மட்டும் பயன்படுத்திக் கொள்ளாமல் தன்னை நாடி வருவோருக்கும் பகுத்துண்டு வாழும் வாழ்கையை மன்னர்கள் கடைப்பிடித்ததை கூறுவதன் மூலம் விருந்தோம்பல் அறத்தையும் அதன் முருகியல் தன்மையின் வெளிப்பாடும் புலப்படுகின்றது (Balasubramanian, 2004).

## கடமை அறம்

ஒவ்வொரு தனி மனிதனும் தனக்கென கடமையைக் கொண்டு வாழ வேண்டும். கடமை உணர்வு மேலோங்க நாடும் நாட்டு மக்களின் வாழ்வும் மேன்மை அடையும். ஒரு வீட்டில் வாழும் தாய், தந்தை, மகன், படைக்கலம் செய்யும் கொல்லன், நாட்டைக் காக்கும் அரசன் முதலியோரின் கடமை இவையிவை என திட்டமாகக் கூறும் புறுநானூற்றுப் பாடலொன்றில்,

“ஈன்று புறந் தருதல் என்தலைக் கடனே

சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே

வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே”

என்ற பாடலில் தந்தையின் கடமை குழந்தைகளைச் சான்றோனாக வளர்ப்பதும், தாயின் கடமை பிள்ளைப் பெற்றுத்தருதல், கொல்லனின் கடமை வேல் வடித்து தருதல், மன்னனின் கடமை நாட்டு மக்களைக் காத்தல் என ஒவ்வொருவரின் கடமை இதுவென பொன்முடியார் அழகாகப் புலப்படுத்தியுள்ளார். இப்பாடலின் மூலம் நாட்டுப்பற்றும், வீரவுணர்வும் கிளர்ந்தெழுவதைக் காணலாம் (Balasubramanian, 2004).

## வாய்மை அறம்

இந்த உலகில் இருக்கும் அறங்கள் எல்லாவற்றிலும் மேலான அறம், பொய் பேசாமையே என்பதனை வள்ளுவர்,

“பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பறி

செய்யாமை செய்யாமை நன்று”

என்னும் குறளால் உணர்த்துகிறார். இக்கருத்தினையே புறநானூறும்,

“வாழ்தல் வேண்டிப்

பொய்கூறேன் மெய் கூறுவல்”

என்ற பாடல் எப்படியாகிலும் வாழ்ந்தாலும்போதும் என்ற வாழ்வினை வாழாது இப்படிதான் வாழ வேண்டும் என்ற உயரிய குறிக்கோள்படி வகுத்து வாழ வேண்டும் என்ற வாய்மை அறத்தை முருகியலுடன் புலப்படுத்தியுள்ளார் (Balasubramanian, 2004) “பொய்மையும் வாய்மையிடத்து வாய்ப்பச் சொல்” என்ற வாக்கியத்திற்கு இணங்க வாய்மை ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட ஒழுக்கத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவும் மிளிர்கின்றது எனலாம்.

## கல்வியின் மேன்மை

மனிதன் வாழ்க்கையை நன்முறையில் அமைத்துக் கொள்ளுதற்கும், மேற்கொண்ட முடிவுகளைச் சுயமாக எடுப்பதற்கும் கல்வி உறுதுணைப்புரிகின்றது. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதைப்

“எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே”

என்று புறநானூறு பாடல் ஒன்று கல்வியின் மகத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது (Balasubramanian, 2004).

மேலும் மனிதன் பண்புநலன்களாலும் அறிவு நலன்களாலும் மேம்பட்டு விளங்கத் துணை செய்யும் முதல் நிலையே கல்வியாகும். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கல்வியினால் வரும் உறுதிப் பொருளைக் கூறுகையில்,

“உற்றுழை உதவியும், உறுபொருள் கொடுத்தும்

பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே

அறிவுடை யோன் ஆறு அரசும் செல்லும்”

என்றபாடலில் கல்வியின் மேன்மையைக் கூறுகையில் ஒருதாய் வயிற்றில் பிறந்தாலும் அத்தாயானவள் கல்வி கற்றோனையே மதிப்பாள். அதுமட்டுமின்றி நாட்டிற்கே அரசனாலும் அவனும் கல்வி கற்றோரின் வழியே பின்பற்றி நடப்பான் என்று புலவர் பாடியுள்ளார். கல்வியின் சிறப்பினை ஒவ்வொருவரும் உணந்து அதனால் கிடைக்கும் அறிவினைக் கொண்டு இந்த நாடு சிறக்கவும், இந்த நாட்டு மக்களின் வாழ்வியல் மேம்படவும் பாடுபட வேண்டும் என்று கல்வியின் சிறப்பினை அழகாக புலவர் எடுத்துரைத்துள்ளர் (Balasubramanian, 2004).

## முடிவுரை

புறநானூற்றில் முருகியல் கோட்பாடு என்னும் தலைப்பில் சங்ககால மக்களின் பழக்கவழக்கங்களின் மூலம் அவர்களின் பண்பாட்டு அறம், சமுதாய அறம், கல்வியின் மேன்மை, வாய்மை அறம், விருந்தோம்பல் பண்பு, ஈகையறம் ஆகியவற்றின் வெளிப்பாடாக முருகியல் அறத்தை எடுத்துக் கூறுவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது. சங்ககால மக்கள் அனைவரும் சாதி, மதம் எனும் ஏற்றத்தாழ்வு இன்றி ஒற்றுமை உணர்வுடன் வாழ்ந்தனர் என்பதை அறிய முடிகிறது. ஆணும் பெண்ணும் சமம் என்ற உயரிய கொள்கை கொண்டு பெண்களும் சங்ககாலத்தில் கல்வியில் சிறந்து விளங்கினர் என்பதை அறிய முடிகிறது. வரும் தலைமுறையினர் நற்பயன் அடையவும், நல்ல செயல்களை பின்பற்றி, தீய வழியில் செல்லாமல் அறத்தோடு வாழ புறநானூறு பெரும்

துணைப்புரிகின்றது. புறநானூறு கூறும் பாடல் வழி நடந்து நாட்டின் முன்னேற்றத்திற்கும் உயர்வுக்கும் உறுதுணையாக இணைந்து செயல்படுவோம்.

## References


Elavazhagan, K. (2003) Tholkappiyam Porulathigaram-Ilapuranam, Tamilman Pathippagam, Chennai, India.

Gurunathan, V. (2003) Puranaanooru Moolamum Uraiyum, Vadivel Pathippagam, Thanjavur, India.

Meiyappan, S. (1992) Bharathiyar Kavidhaigal, Manivaasagar Pathippagam, Chennai, India.

Sandhiya Nadarajan, (2004) Madurai Tamil Agarathi, Meenashi Pathippagam, Chennai, India.

Thirunavukkarasu, (2007) Puranaanooru Puthaiyal, Vaanathi Pathippagam, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License